بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 30/06/2023 அன்று U.K. - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

**பத்ர் யுத்தத்திற்காக மேற்கொள்ளப்பட்ட ஆயத்தங்களின் நிலைமைகள், சம்பவங்கள் மற்றும் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அழுது மன்றாடி செய்த துஆக்கள் பற்றிய குறிப்பு**

أَشۡهَدُ أَنۡ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحۡدَهٗ لَا شَرِيۡكَ لَهٗ وَأَشۡهَدُ أَنَّ مُحَمَّدًا عَبۡدُهٗ وَرَسُوۡلُهٗ۔ أَمَّا بَعۡدُ فَأَعُوۡذُ بِاللّٰهِ مِنَ الشَّيۡطٰنِ الرَّجِيۡمِ۔

بِسۡمِ اللّٰهِ الرَّحۡمٰنِ الرَّحِيۡمِ ۝١ اَلۡحَمۡدُ لِلّٰهِ رَبِّ الۡعٰلَمِيۡنَ ۝٢ اَلرَّحۡمٰنِ الرَّحِيۡمِ ۝٣ مٰلِكِ يَوۡمِ الدِّيۡنِ ۝٤

إِيَّاكَ نَعۡبُدُ وَإِيَّاكَ نَسۡتَعِيۡنُ ۝٥ اِهۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِيۡمَ ۝٦

صِرَاطَ الَّذِيۡنَ أَنۡعَمۡتَ عَلَيۡهِمۡ ۙ غَيۡرِ الۡمَغۡضُوۡبِ عَلَيۡهِمۡ وَلَا الضَّآلِّيۡنَ ۝٧

சவாது பின் கஸிய்யா (ரலி) அவர்கள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மீது கொண்டிருந்த நேசத்தை, விநோதமான முறையில் வெளிப்படுத்திய சம்பவம் கடந்த குத்பாவில் கூறப்பட்டது. இது தொடர்பாக மேற்கொண்ட விளக்கம் இவ்வாறு வருகிறது:

ஹஸ்ரத் சவாது பின் கஸிய்யா (ரலி) அவர்கள் இந்தப் போரில் வெற்றிபெற்ற கம்பீரத்துடன் திரும்பினார்கள். இணைவைப்பாளர்களில் ஒருவனான காலித் பின் ஹிஷ்ஷாமை சிறைபிடிக்கவும் செய்தார்கள். பிற்காலத்தில் இவர்களை ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கைபர் போருக்காக செல்வத்தை ஒன்று திரட்டும் செயலராக நியமித்தார்கள்.

**ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் இந்த சம்பவத்தை இவ்வாறு எடுத்துக் கூறியுள்ளார்கள்:**

அது ஹிஜ்ரீ 2 ஆம் ஆண்டு ரமலான் மாதம் 17 ஆம் தேதி மற்றும் ஜுமுஆ நாளாக இருந்தது. காலையில் எல்லாவற்றிற்கும் முதலாக தொழுகையை நிறைவேற்றினார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஜிஹாது எனும் தலைப்பில் உரை நிகழ்த்தினார்கள். பிறகு, சற்று வெளிச்சம் வந்ததும், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஓர் அம்பை வைத்து முஸ்லிம்களின் வரிசையை சரி செய்யத் துவங்கினார்கள்.

சவாது எனும் பெயரை உடைய ஒரு சஹாபி வரிசையிலிருந்து சற்று முன்னால் வந்து நின்று கொண்டிருந்தார்கள். ஹுஸூர் (ஸல்) அவர்கள் அம்பை வைத்து அவர்களைப் பின்னால் செல்லுமாறு கூறினார்கள். ஆனால், தற்செயலாக அந்த அம்பில் இருந்த கட்டை அந்த சஹாபியின் நெஞ்சில் போய் பட்டது.

அந்த சஹாபி துணிச்சலான முறையில், ‘அல்லாஹ்வின் தூதர் அவர்களே! (ஸல்) அல்லாஹ் தங்களை உண்மையுடனும் நீதியுடனும் அனுப்பியுள்ளான். ஆனால், தாங்கள் அநீயாயமாக என் மீது அம்பால் குத்தி விட்டீர்கள். அல்லாஹ்வின் மீது ஆணையாக! நானோ இதற்குப் பழி வாங்கியே தீருவேன்’ என்று பணிவுடன் கூறினார்கள்.

அதைக் கேட்ட ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், ‘சரி, சவாது நீரும் என்னை அம்பால் குத்திக் கொள்ளும்’ என்று கூறினார்கள். இதைக் கூறிவிட்டு அன்னார் தமது நெஞ்சின் மீதிருந்து துணியைத் தூக்கி விட்டார்கள். சவாதுக்கு இது என்ன ஆயிற்று என்று சஹாபா கவலையில் மூழ்கி விட்டார்கள்.

**ஹஸ்ரத் சவாது (ரலி) அவர்கள் அன்பு மிகுதியால் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் நெஞ்சை முத்தமிட்டார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் புன்சிரித்தவாறு, ‘சவாதே! இது உமக்கு என்ன தோனிற்று?’ என்று கேட்டார்கள்.**

**அதற்கு ஹஸ்ரத் சவாது (ரலி) அவர்கள் உருக்கமான குரலில், ‘அல்லாஹ்வின் தூதர் அவர்களே! (ஸல்) எதிரி முன்னால் இருக்கிறான். இங்கிருந்து தப்பிச் செல்ல முடிகிறதோ, இல்லையோ என்று ஒன்றும் தெரியவில்லை. நான் ஷஹீத் ஆவதற்கு முன் தங்களது அருளுக்குரிய உடலோடு என் உடலை உரசிக் கொள்ள நினைத்தேன்’ என்று பணிவுடன் கூறினார்கள்.**

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் வரிசைகளை நேராக்கி விட்ட பிறகு, சஹாபாவிடம், ‘நான் உங்களுக்குக் கட்டளையிடாத வரை எதிரிகள் மீது தாக்குதல் தொடுக்கக்கூடாது. எதிரி முற்றிலும் அருகில் வந்து விடாத வரை வாள்களை ஏந்தக்கூடாது’ என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தாம் ஆற்றிய உரையில் ஜிஹாது, பொறுமை காத்தல் ஆகியவை பற்றி வலியுறுத்தினார்கள். மேலும், கூறினார்கள்: இன்னல் வரும் வேளையில் பொறுமை காப்பதனால் அல்லாஹ் துயரங்களை அகற்றுகிறான். துன்பங்களில் இருந்து விடுதலை அளிக்கிறான்.

ஓரிடத்தில், **ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் நிகழ்த்திய இந்த உரையின் விவரம் இவ்வாறு எடுத்துரைக்கப்பட்டுள்ளது:**

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அல்லாஹ்வைப் புகழ்ந்து அவனது தூய்மையை எடுத்துரைத்தார்கள். மேலும், கூறினார்கள்: அல்லாஹ் ஊக்குவித்த விஷயத்தில் நான் உங்களை ஊக்குவிக்கிறேன். அவன் உங்களைத் தடுத்துள்ள விஷயத்தை விட்டும் நான் உங்களைத் தடுக்கிறேன். கண்ணியத்திற்குரியவனும் மேலானவனும் ஆன அல்லாஹ் உங்களுக்கு உண்மையை மேற்கொள்வதற்கான கட்டளை பிறப்பிக்கிறான்.

அவன் உண்மையை விரும்புகிறான். அவன் நற்செயல் ஆற்றுபவர்களுக்கு உயர்த் தகுதிகளை வழங்குகின்றான். கடுமை காட்டும் இடத்தில் பொறுமை காட்டுவதன் மூலம் அல்லாஹ் துயரத்தை அகற்றுகிறான். துன்பத்தில் இருந்து விடுதலை அளிக்கிறான். பொறுமை காட்டுவதன் மூலமாக மறுமையில் ஈடேற்றம் அடைவீர்கள்.

அல்லாஹ் கூறுகிறான்: நீங்கள் ஒருவருக்கொருவர் கொண்ட மிகுந்த வெறுப்பை விட அல்லாஹ்வின் வெறுப்பு மிகப் பெரிது. அவன் உங்களுக்குக் கட்டளையிட்டுள்ள விஷயத்தைப் பாருங்கள். அவன் உங்களுக்குத் தன்னுடைய அடையாளங்களைக் காட்டினான். இழிவுக்குப் பிறகு உங்களுக்கு கண்ணியமளித்தான். அல்லாஹ் உங்கள்மீது திருப்தி கொள்ளும் பொருட்டு அவனது ஆடையை உறுதியாகப் பற்றிப் பிடித்துக் கொள்ளுங்கள்.

இந்த இடத்தில் நீங்கள் உங்கள் இறைவனின் சோதனையில் முழுமையாக வென்று காட்டுங்கள். அதன்மூலம் நீங்கள் அவன் உங்களிடம் வாக்குறுதியளித்துள்ள அவனுடைய கருணைக்கும், பாவமன்னிப்புக்கும் உரியவர்களாக ஆகிவிடுவீர்கள். அவனுடைய வாக்குறுதி உண்மையானது. அவனுடைய கூற்று உண்மையானது. அவன் அளிக்கும் தண்டனை கடுமையானது.

நானும் நீங்களும் உயிருள்ளவனும் நிலைத்திருப்பவனுமான அல்லாஹ்வுடன் இருக்கிறோம். நாம் அவனிடம் நம்முடைய வெற்றிக்காக துஆ செய்கிறாம். அவனுடைய ஆடையைப் பற்றிப் பிடிக்கிறோம். அவனையே நம்பி இருக்கிறோம். அவன் பக்கமே திரும்பிச் செல்ல வேண்டியுள்ளது. அல்லாஹ் நம்மையும் முஸ்லிம்களையும் மன்னித்தருள்வானாக!

ஹஸ்ரத் இப்னு அப்பாஸ் (ரலியல்லாஹு அன்ஹுமா) அவர்கள் அறிவிக்கிறார்கள். **ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பத்ர் நாளன்று சஹாபாவிடம் கூறினார்கள்:** “ஹாஷிம் கோத்திரத்தினரும், மற்ற சில மக்களும் நிர்பந்தத்தினால், குறைஷிகளுடன் வந்துள்ளதாகவும், அவர்கள் நம்முடன் போர் புரிய விரும்பவில்லை என்பதும் எனக்குத் தெரிய வந்துள்ளது.

எனவே, உங்களில் எவர் ஹாஷிம் கோத்திரத்து மனிதர் எவரையும் சந்திக்கிறாரோ, அவர் அவரைக் கொல்ல வேண்டாம். எவர் அபுல் பக்தரீயை சந்திக்கிறாரோ, அவர் அவரைக் கொல்ல வேண்டாம். எவர் அப்பாஸ் பின் அப்தில் முத்தலிபை சந்திக்கிறாரோ, அவரும் அவரைக் கொல்ல வேண்டாம். மக்காவில் நமது கஷ்ட நேரத்தில் நம்முடன் கண்ணியமாக நடந்து கொண்ட சிலரும் இந்தப் படையில் கலந்திருக்கிறார்கள்.

மக்காவில் அவர்கள் முஸ்லிம்களுடன் நடந்து கொண்ட அவர்களின் அந்த ஒழுக்கம் காரணமாக, அவர்களின் நன்மைக்குக் கைமாறு செய்வது நமது கடமையாகும். எனவே, இப்படிப்பட்ட எவர் மீதாவது யாராவது ஒரு முஸ்லிம் மேலோங்கினால், அவருக்கு எவ்விதத் துன்பமும் அளிக்கக்கூடாது.''

இதைக் கேட்ட ஹஸ்ரத் அபூஹுஸைஃபா (ரலி) அவர்கள், 'நாம் நம்முடைய சகோதரர்களையும் உறவினர்களையும் மட்டும் கொல்ல வேண்டும்; ஆனால், அப்பாஸைக் கொல்லக்கூடாதா? இது எப்படி முடியும்?' என்று கூறினார்கள். ஹஸ்ரத் அபூஹுஸைஃபா (ரலி) அவர்கள் தாம் கூறிய இந்த விஷயத்தை நினைத்து மிகவும் வருத்தப்பட்டு வந்தார்கள். உயிர்த்தியாகம் மட்டுமே இந்தத் தவறுக்குப் பரிகாரமாக அமைய முடியும் என்று கூறி வந்தார்கள்.

ஆக, ஹஸ்ரத் அபூஹுஸைஃபா (ரலி) அவர்கள் யமாமா போர் அன்று ஷஹீத் ஆகி விட்டார்கள்.

இந்த வழிகாட்டல்களை வழங்கிய பிறகு, ஹுஸூர் (ஸல்) அவர்கள் மீண்டும் கூடாரத்திற்குச் சென்று துஆவில் மூழ்கி விட்டார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கிப்லாவை நோக்கி முகம் திருப்பி, உரத்த குரலில் தம் இறைவனிடம் வேண்டிக் கொண்டிருந்தார்கள்.

எதுவரை என்றால், அன்னாரது போர்வை அன்னாருடைய தோளிலிருந்து விழுந்து விட்டது. ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அன்னாருக்கு அருகில் வந்தார்கள். அன்னாரது போர்வையை எடுத்து மீண்டும் தோளில் போர்த்தி விட்டார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களைப் பின்னால் இருந்து கட்டியணைத்துக் கொண்டார்கள்.

பிறகு, 'அல்லாஹ்வின் நபியே! தாங்கள் தங்கள் இறைவனிடம் செய்துள்ள இந்த துஆ போதுமானதாகும். அவன் தங்களிடம் அளித்துள்ள வாக்குறுதியை நிச்சயமாக நிறைவேற்றுவான்' என்று பணிவுடன் கூறினார்கள்.

**குறைஷிகள் பொதுத் தாக்குதல் தொடுத்ததும் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் இறைவனிடம் மிகவும் உருக்கமாக இவ்வாறு துஆ செய்தார்கள்: ''என் எஜமானே! ஒருவேளை முஸ்லிம்களின் இந்தக் கூட்டம் இன்று அழிந்து விட்டால், உலகில் உன்னை வணங்குபவர் எவரும் இருக்க மாட்டார்.''**

இந்த துஆவை செய்யும்போது, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எந்த அளவு அழுது மன்றாடிக் கொண்டிருந்தார்கள் என்றால், சிலவேளை சஜ்தாவில் விழுந்து வந்தார்கள். சிலவேளை நின்று கொண்டு இறைவனிடம் வேண்டி வந்தார்கள்.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:**

திருக்குர்ஆனில் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு, நிராகரிப்பாளர்களை வெற்றி காண்பதற்கான வாக்குறுதி மீண்டும் மீண்டும் அளிக்கப்பட்டிருந்தது. ஆனால், இஸ்லாத்தின் முதல் போரான பத்ர் யுத்தம் துவங்கியதும், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அழுது துஆ செய்யத் துவங்கி விட்டார்கள். அழுதவாறு இந்தச் சொற்கள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் நாவில் இருந்து வந்தன:

'என் இறைவா! இன்று நீ இந்த ஜமாஅத்தை (அவர்கள் வெறும் 313 பேர் இருந்தார்கள்) அழித்து விட்டால், கியாமத் வரை எவரும் உன்னை வணங்க மாட்டார்.'

**ஹுஸூர் (ஸல்) அவர்கள் கூடாரத்தில் துஆ செய்து கொண்டிருந்தபோது, அன்னாருக்கு சிற்றுறக்கம் ஏற்பட்டது. பிறகு, தீடீரென்று விழித்துக் கொண்டார்கள். மேலும், கூறினார்கள்:** "அபூபக்ரே! மகிழ்ச்சி அடைவீராக! உம் இறைவனின் உதவி வந்து விட்டது. இதோ பாரும், ஜிப்ரீல் தமது குதிரையின் கடிவாளத்தைப்பிடித்து அதை ஓட்டிக் கொண்டு வருகிறார்கள். அதனுடைய கால்களில் புழுதி படிந்துள்ள அடையாளங்கள் உள்ளன."

பத்ர் மைதானத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் ஸுபைர் பின் அவ்வாம் (ரலி) அவர்களை வலப்புறப்படைக்கும், ஹஸ்ரத் மிக்தாத் பின் அம்ர் (ரலி) அவர்களை இடப்புறப்படைக்கும், கைஸ் (ரலி) அவர்களைக் காலாட்படைக்கும் தளபதிகளாக நியமித்தார்கள். (முழு) படையின் தலைமை ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் கையில் இருந்தது.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் முன் வரிசையில் இருந்தார்கள். ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் இவ்வாறு கூறி வந்தார்கள்: "நாங்கள் பத்ர் போர் அன்று ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்குப் பின்னால் இருந்து வந்தோம். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் எதிரிக்கு மிக அருகில் இருந்து வந்தார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் எல்லாப் போராளிகளை விடவும் அதிகம் போர் புரிபவர்களாக இருந்தார்கள்."

**ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:**

படைகள் சரியாக எதிரெதிரே வந்தன. அப்போது இறை வல்லமையால் வினோதமான காட்சி தென்பட்டது. அதாவது, அப்போது படைகள் நிற்கும் வரிசை எப்படி இருந்ததென்றால், இஸ்லாமிய படை குறைஷிகளுக்கு இரட்டிப்பாகத் தென்பட்டு வந்தது. அதே வேளையில், மறுபுறம் குறைஷிகளின் படை முஸ்லிம்களுக்கு அதன் அசல் எண்ணிக்கையை விடக் குறைவாகத் தென்பட்டது.

குறைஷிய தலைவர்கள் இஸ்லாமிய படையை சரியாக கணிப்பதற்காக உமைர் பின் வஹ்பை அனுப்பினார்கள். முஸ்லிம்களின் கம்பீரத்தைப் பார்த்த உமைர் எந்த அளவு மதிப்பச்சத்திற்கு ஆளானான் என்றால், அவன் முற்றிலும் நம்பிக்கையிழந்து நிராகரிப்பாளர்களிடம் திரும்பிச் சென்றான்.

மேலும், குறைஷிகளைப் பார்த்துக் கூறினான்: ‘குறைஷிகளின் கூட்டமே! நான் முஸ்லிம்களின் படையில், ஒட்டகங்கள் தம்மீது மனிதர்களை அல்ல; மாறாக, மரணங்களைத் தூக்கியிருப்பதைக் கண்டேன்.’ குறைஷிகள் இதைக் கேட்டதும் அவர்களிடம் நிம்மதியில்லா நிலை உருவாகி விட்டது.

ஹக்கீம் பின் ஹிஸ்ஸாம் இந்த விஷயத்தைக் கேட்டதும், உத்பா பின் ரபீஆவிடம் வந்து, திரும்பிச் செல்லுமாறு உத்பாவுக்கு ஆலோசனை கூறினான். உத்பா சுயமே பதறிப் போயிருந்தான். அவனுக்கு இந்த ஆலோசனை பிடித்து விட்டது. அவன் ஹக்கீமிடம், ‘நாமும் முஸ்லிம்களும் உறவினர்கள் தானே. சகோதரன் சகோதரன் மீது வாள் ஏந்துவது நன்றாகவா இருக்கிறது? நீ அபூஜஹ்லிடம் செல். அவனுக்கு முன்னால் இந்த ஆலோசனையை எடுத்து வை’ என்று கூறினான்.

ஹக்கீம் பின் ஹிஸ்ஸாம் இந்த ஆலோசனையை அபூஜஹ்லுக்கு முன்னால் வைத்த போது, அவன் உடனடியாக, ‘ஓஹோ! இப்போது உத்பாவுக்குத் தன் முன் தன் உறவினர்கள் தென்பட ஆரம்பித்து விட்டார்களா?’ என்று கேட்டான்.

பிறகு, அபூஜஹ்ல் நுட்பமாக செயல்பட்டு இந்த ஆலோசனையை எப்படி நிராகரித்தான் என்றால், நிராகரிப்பாளர்களின் படையில் இருந்தவர்களின் நெஞ்சங்களில் பகைமைத் தீ அதிகரித்து விட்டது. போர் அடுப்பு தனது முழு ஆற்றலுடன் கொழுந்து விட்டு எறியத் துவங்கியது.

*குத்பாவின் இறுதியில் ஹூஸூர் (அய்யதஹூல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்:* போர் துவங்கியது பற்றிய மீத விவரம் இனி எடுத்துரைக்கப்படும்.

اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا مَنْ يَّهْدِهِ اللّٰهُ فَلَا مُضِلَّ لَهٗ وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِيَ لَهٗ وَنَشْهَدُ اَنْ لَّآ اِلٰهَ اِلَّا اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ، عِبَادَ اللّٰهِ رَحِمَكُمُ اللّٰهُ اِنَّ اللّٰهَ يَأْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ ذِى الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْيِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللّٰهَ يَذْكُرْكُمْ وَادْعُوْهُ يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ۔

**(தமிழாக்கம்: மவ்லவி அத்தாவுல் முஃக்னீ)**